**செய்தி வெளியீடு எண்: 667** **நாள்:15.09.2020**

<u>செய்தி வெளியீடு</u>

"தமிழ்நாடு சூரிய சக்தி ஆற்றல் கொள்கை 2019" மீதான ஆய்வு மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு சி. பொன்னையன் அவர்களின் தலைமையில் 11.09.2020 அன்று காலை 11.00 மணிக்கு மனிதவள மேம்பாட்டு காணொலி அரங்கம், எழிலகம், சென்னை – 5 ல் நடைபெற்றது.

இவ்வாய்வில் மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலர் திரு அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நல்கினார்.

கூடுதல் தலைமைச் செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை, இயக்குநர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட துறை, மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் மற்றும் அரசு துறை செயலர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்கள் இக்கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் சூரிய சக்தி ஆற்றலின் முக்கியத்துவத்தை விளக்கினார். மேலும் சூரிய சக்திக்கான குறைந்த செலவிலான தொழில்நுட்பம் மூலம் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தினார். வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்களை அரசிடம் எடுத்து சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**